DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் -சுசீலா | **PW-1** | வயது |
| த/க பெயர் | | தொழில் |
| கிராமம் | | தாலூக்கா |
| மாவட்டம் | | |

<u>முதல் விசாரணை:-</u>

1) நான் தற்போது பூலாம்பட்டி அஞ்சல், ஊத்துக்குளிக்காட்டில் வசித்து வருகிறேன். நான் சின்னத்தம்பி மகன் குருசாமி, சின்னதம்பி மனைவி மாரியம்மாள், சின்னசாமி மகன் மாரிமுத்து, நாச்சிமுத்து மகன் சின்னுசாமி, பொன்னுசாமி மகன் குருசாமி, பத்திர எழுத்தர் பழனிச்சாமி, ஆறுமுகம் மகன் சென்ட்ராயன், பொன்னுசாமி மகன் ரங்கநாதன் ஆகியோர் மீது தனிப்புகரைப் பதிவு செய்துள்ளேன். எனது தாத்தா சித்தகவுண்டருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் பெயர் சின்னப்பன், இளைய மகன் குருசாமி ஆவர். 1994ம் ஆண்டு புதுப்பட்டியைச் சார்ந்த சின்னுகவுண்டர் மகள் மாரியம்மாள் என்பவரை மேற்படி குருசாமி திருமணம் செய்து கொண்டார். எண்ணெய்த் தேய்ப்புக்கு சென்ற மாரியம்மாள் அதன் பிறகு திரும்பி வரவில்லை.

2) பலமுறை மேற்படி குருசாமி அவரை அழைத்தார். நியாயம் வைத்தும் கூப்பிட்டார். மேற்படி மாரியம்மாள் வரவில்லை. அதன் பிறகு மேற்படி மாரியம்மாள், சின்னத்தம்பி என்பவருடன் வாழ்ந்து வந்தது தெரியவந்தது. குருசாமியுடனான

திருமணத்திற்கு முன்பே அவர்களுக்கு இடையே தொடர்பு இருந்தது தெரிய வந்தது. கோபியில் ஒரு வழக்கறிஞரை வைத்து மேற்படி குருசாமி, மாரியம்மாளுக்கு, அவர்களுக்கு இடையில் இனிமேல் எந்த தொடர்பும் இல்லை எனக் குறிப்பிட்டு ஒரு அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். அதன்பிறகும் மாரியம்மாள் வரவில்லை. எனக்கு 6 வயது இருக்கும்போது மேற்படி குருசாமி ஆணைக்கவுண்டனூரில் உள்ள அக்கினிமாரியம்மாள் கோவிலில் வைத்து என்னை தனது மகளாக தத்து எடுத்துக் கொண்டார்.

3) குருவரெட்டியூர் பள்ளியில் கையெழுத்து போட்டு என்னை பள்ளியில் சேர்த்து என்னை 10ம் வகுப்பு வரை படிக்க வைத்தார். அவர்தான் எனது அப்பா என்று சொல்லி கையெழுத்து போட்டார். அதன் பின்னிட்டு ஊத்துக்குளி காட்டைச் சேர்ந்த ராசு என்கிற ராசுபையன் என்பவரை அவர்தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார். என்னை தத்து எடுத்த அப்பாவிற்கும், எனக்கும் பூர்வீக சொத்தாக இரண்டு ஏக்கர் நிலம் கள்ளாங்காட்டு தோட்டத்தில் உள்ளது. அதனுடைய சர்வே எண்.120, 121/1 ஆகும். அது இளுப்பிளி கிராமத்தில் உள்ளது. மேற்படி நிலத்தை நானும், எனது அப்பா குருசாமியும் இதுவரை உழவடை செய்து வருகிறோம். அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து உடல்நிலை சரியில்லாமல் போனது. அவரை இரண்டு, மூன்று மருத்துவமனைகளில் பார்த்தேன். அவருக்கு எலும்புறுக்கி நோய் இருந்ததாக சொன்னார்கள். அவருக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

4) அப்போது எனது பக்கத்து காட்டைச் சேர்ந்த குருசாமி, சின்னுசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர் எங்கள் காட்டை குறைந்த விலைக்கு தரச்சொல்லி எனது அப்பாவைக் கேட்டார்கள். அதற்கு எனது அப்பா அவர்கள் சொத்து முழுவதும் அவரது மகளான எனக்குத் தான் சொந்தம் என்றும், விற்க முடியாது என்றும் சொல்லிவிட்டார். சிறிது நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டார்.அவரது இறப்பிற்கு நான்தான் மகளாக இருந்து சடங்குகள் செய்தேன். மேற்படி காட்டை நான் தான் இதுவரை ஓட்டி வருகிறேன். எனது அப்பாவிற்கு ஏற்பட்ட உடல்நிலை கோளாறிற்கு மேட்டூர் மருத்துவமனை, பெருந்துறை, அந்தியூர் ஆகிய ஊர்களிலும், வேறு சில மருத்துவமனைகளிலும்

வைத்தியம் பார்த்தேன். அதன்பிறகு மாரியம்மாள் என்பவர் சின்னத்தம்பி என்பவரை மறு திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு குருசாமி என்ற மகன் பிறந்தார். எனது அப்பா குருசாமி இறந்த பிறகு மாரிமுத்து, பொன்னுசாமி மகன் குருசாமி ஆகிய இருவரும் புதுப்பட்டியைச் சார்ந்த மாரியம்மாளையும், சின்னத்தம்பிக்கு பிறந்த குருசாமியையும் கூட்டி வந்து ஆள் மாறாட்டம் செய்து எனது அப்பா குருசாமியின் மகன் தான் மேற்படி குருசாமி என்று சொல்லி ஆள்மாறாட்டம் செய்து சென்னிமலையைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவரை வைத்து பொய்யாக ஒரு பத்திரத்தை தயார் செய்து மாரிமுத்து என்பவர் பெயரில் மோசடியான பத்திரத்தை உருவாக்கி, மேற்படி சொத்துக்கு நான்தான் வாரிசு என்று தெரிந்தும், மாரியம்மாளிடமிருந்தும், 1 வது எதிரி குருசாமியிடமிருந்தும் மேற்படி சொத்தை கிரையம் பெற்றுள்ளார்.

5) மேற்படி கிரையத்திற்கு சாட்சிகளாக குருசாமி மற்றும் சின்னசாமி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி கிரைய ஒப்பந்தந்திற்கு சென்ட்ராயன், ரங்கநாதன் ஆகியோர் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி கிரையம் செய்தது எனக்குத் தெரியாமல் இருந்தது. பின்னிட்டு சிறிது நாட்கள் கழித்து மாரிமுத்து என்பவர் மேற்படி காடு என்னுடையது அல்ல என்று சொல்லி என்னை மிரட்டினார். பின்னர் இது குறித்து நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னை மிரட்டியது குறித்தும், சொத்தை ஏமாற்றி கிரையம் செய்து விட்டார்கள் என்றும் புகார் கொடுத்தேன். ஆனால் அம்மாபேட்டை போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னிட்டு அது தொடர்பாக SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். பலமுறை சென்றேன். எனக்கு பதில் கொடுக்கவில்லை. எனவே நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து உத்தரவு பெற்றேன். அதனடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. போலீசாரிடம் கேட்டபோது நீதிமன்றம் சென்று பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டார்கள். அதன்பிறகு நீதிமன்றத்தில் நான் தனிப்புகார் கொடுத்தேன்.

**மனுதாரர் தரப்பில் சாட்சியத்திற்கு காலஅவகாசம் கோரப்பட்டதால் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**